மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத்தலைவர் அவர்களே, அந்த அணாவரி சர்ட்டிபிகேட்டில் அணா • பைசா தான் போட்டு இருக்கிறார்கள். அதிலே மாற்றம் என்பது உங்களுக்குத் தெரியும். அணா என்கிறபோது, நார்மல் விளைச்சல் 12 அணா என்று சொல்லப்படுகிறது. சில பேர் நார்மல் விளைச்சல் என்றால் 12 அணா என்று தெரியாமல் கூட இருந்தார்கள். சில அதிகாரிகள் கூட இருந்தார்கள். நார்மல் விளைச்சல் என்பது 12 அணாதான். இதற்கு முன்னால் இருந்த அரசு இரண்டணா விளைச்சல் என்று சொன்னால் வரியை தள்ளுபடி செய்து கொடுத்துக்கொண்டு இருந்தது. திராவிட முன்னேற்றக்கழக அரசு வந்த பிறகு அதை $2\frac{1}{2}$ அணாவோ, 3 அணாவோ என்று ஆக்கினார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகு அதை 6 அணா என்று ஆக்கியிருக்கிறது. 6 அணா என்றால் 50 சதவீதம் அதாவது 37 பைசா விளைச்சல் வந்தால், அதாவது 20 கலம் விளைகிற இடத்தில் 10 கலம் விளைச்சல் வந்தால், அல்லது குறைவாக வந்தால், நிலவரி, தண்ணீர்த் தீர்வை முதலியவை விளைச்சல் இல்லை என்று சொல்லி தள்ளுபடி செய்து கொடுக்கப்படுகிறது.

திரு. கே. உச்சி: துணைத் தலைவரவர்களே, அங்கே வீடு இல்லாமல் இருப்பவர்களுக்கு சில தர்ம ஸ்தாபனங்கள் மூலம் வீடு கட்டிக் கொடுக்க அனுமதி கேட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் எழுதியிருக்கிறார். இதுவரை அனுமதி வரவில்லை. ஆகவே, உடனடியாக அந்த அனுமதியை வழங்க நடவடிக்கையெடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அது உடனடியாகக் கவனிக்கப்படும்.

(ஆ) வெற்றிலைக் கொடிக்கால்களில் பரவும் கொடிய நோயைத் தடுப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து 41-வது விதியின்கீழ் திருவாளர்கள் ரா. கிருஷ்ணன், எம். அண்ணாமலை, நா. பழனிவேல், தே. ஞானசிகாமணி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு ஒன்றினை மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. ரா. கிருஷ்ணன்.

திரு. ரா. கிருஷ்ணன்: துணைத் தலைவரவர்களே, ''தமிழகத்தில் குறிப்பாக திருநெல்வேலி, தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் வெற்றிலைக் கொடிக்கால்களில் கொடிய நோய் பரவியுள்ளதன் காரணமாக, வெற்றிலைப் பயிரிடும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதால், அந்நோயை ஒழிக்க வேண்டிய அவசியம்'' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1979 மார்ச் 13]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1978-79 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் 1,123 ஏக்கரில் வெற்றிலை பயிரிடப்பட்டது. அதில் செங்கோட்டை வட்டத்திலுள்ள ஆயக்குடி கிராமத்தில் 30 ஏக்கர் பரப்பளவில் வெற்றிலைக் கொடிக்கால் பயிர் 'ஸ்கேல்ஸ்' மற்றும் 'அபிட்ஸ்' என்ற பூச்சிகளால் தாக்கப்பட்டது. இதைத்தவிர திருச்செந்தூர் வட்டத்திலுள்ள ஆத்தூர் கிராமத்தில் உள்ள ஒரு ஏக்கர் வெற்றிலைக் கொடிக்கால் 'டவ்னி மில்டியூ' என்ற பூச்சியினால் தாக்கப்பட்டது. வேளாண்மைத் துறையினரால் உரிய நேரத்தில் பூச்சித் தடுப்பு முறைகள் எடுக்கப்பட்டு, வெற்றிலைக் கொடிக்கால் பூச்சிகளாலும் மற்றும் பயிர் நோய்களிலிருந்தும் தாக்கப்படுவதிலிருந்து காக்கப்பட்டது.

1978-79 ஆம் ஆண்டில் தென்னாற்காடு மாவட்டத்தில் 799 ஏக்கரில் வெற்றிலைக் கொடிக்கால் பயிரிடப்பட்டது என்று கூறப்படுகிறது. மேலும் இந்தப் பகுதியில் இப்பயிர் பூச்சி மற்றும் பயிர் நோய்களாலும் தாக்கப்படவில்லை,

திரு. ரா. கிருஷ்ணன் : துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே திருநெல்வேலி மாவட்டத்தில் ஒருசில பகுதிகளில் பூச்சி தாக்கியதாகச் சொல்லப்படுகிறது. அவர்களுக்கு மானியம் வழங்குவதற்கு இந்த அரசு முன்வருமா? அதோடு நிலத் தீர்வை போன்றவற்றை ரத்து செய்யவும் ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே விவசாயத் துறையின் மூலம் தகுந்த நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, வெற்றிலைக் கொடிக்கால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. மேற்கொண்டு ஏதாவது சலுகை அளிக்க வேண்டியிருந்தால் அதுபற்றி பரிசீலனை செய்யலாம்.

* திரு. எம். அண்ணாமலை : பேரவைத் துணைத் தலைவரவர்களே, திருநெல்வேலி, தென்னாற்காடு மாவட்டங்களில் உள்ள வெற்றிலைக் கொடிக்கால் சாகுபடியில் நோய் ஏற்பட்டு, அந்த நோய்களைத் தடுக்க விவசாயத்துறையின் மூலம் மருந்து அடிக்கப்பட்டு, தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். மருந்து அடிக்கப்பட்டதா என்பது வேறு பிரச்சினை. ஆனால் அங்கே விவசாயிகளாகவே மருந்து அடித்தும், பூச்சிகள் அழியாமல் வெற்றிலைக் கொடிக்கால்தான் அழிந்துபோயிருக்கிறது. அடித்த மருந்து பூச்சிகளைக் கொல்லவில்லை. அதற்குக் காரணம் அடிக்கப்பட்ட மருந்து வீரியம் குன்றியதாக இருக்கிறது.

இந்த வெற்றிலைக் கொடிக்கால் சாகுபடியில் இரண்டு முக்கியமான பிரச்சினை இருக்கிறது. ஒன்று வெற்றிலை சாகுபடிக்கு மழைக் காலத்திலும் ஆபத்து, வறட்சிக்காலத்திலும் ஆபத்து இருக்கிறது. வருஷத்தில் இந்த இரண்டு ஆபத்துக்

களைக் கடந்து சாகுபடி செய்ய வேண்டியிருக்கிறது. இந்த இரண்டு மாவட்டங்களைத் தவிர வேறு சில பகுதிகளிலும் வெற்றிலை சாகுபடி பாதிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது, பூச்சிகளைக் கொல்ல அடிக்கக்கூடிய மருந்துகள் வீரியம் குன்றி யிருப்பதால் நோயைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் கேள்வியைக் கேளுங்கள். அமைச்சர் விளக்கம் சொல்லட்டும்.

திரு. எம். அண்ணாமலை : எனவே அடிக்கக்கூடிய மருந்து வீரியம் இல்லாமல் இருப்பதால், அதை பரிசீலித்து இனிமேல் அடிக்கும் மருந்து நல்ல வீரியம் உள்ளதாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளப்படுமா ? அதோடு ஏற்கெனவே நேர்ந்துள்ள பெரும் இழப்புகளால் பெரும் கஷ்டத்தில் இருக்கிற சாகுபடியாளர்களால் மேலும் மருந்து வாங்க சக்தி இல்லாமல் இருப்பதால், இலவசமாக மருந்து அடிக்க, நோயைப்போக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, மருந்துகள் சரியான முறையில் வீரியம் குன்றாமல் இருக்கின்றனவா என்பதை ஆராய்ச்சி நிலையங்களில் ஆராய்ச்சி செய்து பார்த்த பின்னால்தான் அந்த மருந்துகள் டெப்போக்கள் மூலம் விற்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வீரியம் குன்றிய மருந்துகளை எந்த டெப்போவிலாவது விற்றால், அதுபற்றி அரசுக்கு உடனடியாகத் தெரிவித்தால் தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது.

நெல்லை, தென்னாற்காடு மாவட்டங்கள் தவிர வேறு சில மாவட்டங்களிலும் இதைப்போன்ற பயிர் பூச்சிகள் வெற்றிலைக் கொடிக்கால்களை தாக்கியிருக்கின்றன. அந்தப் பகுதிகளில் எல்லாம் வேளாண்மைத் துறையினர் அடிக்கடி பார்வையிட்டு, நடவடிக்கை மேற்கொண்டதால் நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே, மேலும் இதுபோன்ற நோய்கள் எங்காவது தோன்றுவதாக இருந்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்கு அதைக் கொண்டுவந்தால் மீண்டும் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

[முற்பகல் 11-00]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த வெற்றிலைக் கொடிக்கால் திருநெல்வேலி மாவட்டத்திலே பல பகுதிகளிலே உற்பத்தி செய்யப்படுகிறது. இப்படிப்பட்ட நோய் வெற்றிலைக் கொடிக்காலில் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனை அமைச்சரவர்களே ஒப்புக் கொண்டார்கள். ஆகவே இந்தத் தொழிலைப் பாதுகாக்கின்ற

1979 மார்ச் 13] [திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்]

வகையில் அங்கே ஒரு துணை இயக்குநரை நியமிக்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா? இந்த வெற்றிலைக் கொடிக்கால் சம்பந்தப்பட்ட வகையில் ஒரு தனி அமைப்பினை ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு விவசாயத்துறையில் உள்ள அதிகாரிகளாகிய டெபுட்டி அக்ரிகல்சர் ஆபீஸர்ஸ், மாவட்ட வேளாண்மை அதிகாரிகள் ஆகியோரே இவைகளை எல்லாம் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதற்கு தனி அலுவலரை நியமிக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(7) அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, (சட்டமன்ற பேரவை சட்டமுன்வடிவு எண் 13/1979) (தொடர்ச்சி).

*திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மதுவிலக்குச் சட்டம் கடுமையாக்கப்படுவது நியாயம் அல்ல என்பதற்கான காரணங்களை நேற்றைய தினம் ஓரளவுக்கு நான் விளக்கி இருக்கிறேன். அப்போது புள்ளிவிவரங்களைக் காட்டாமல் மொத்தமாக ஒரு கருத்தை நான் சொன்னேன். அது மட்டுமல்லாமல் ஆளுநர் உரையிலே பேசுகின்றபோதும் மதுவிலக்குச் சட்டத்தைப் பற்றி ஆனந்தவிகடனில் எழுதப்பட்டிருந்ததை நான் எடுத்துக் காட்டினேன்,

இன்றைய தினம் திரு. சதாசிவம் அவர்கள், முன்பு நீதிபதியாக இருந்தவர்களைத் தலைவராகக் கொண்ட குழுவால் 1975-76 ஆம் ஆண்டில் எவ்வளவு வழக்குகள் மதுவிலக்கு குற்றத்திற்காகத் தொடரப்பட்டன என்பது முதலான விவரங்களை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். 1975-76 வது ஆண்டிலே அவ்வாறு தொடரப்பட்ட வழக்குகள் 4,46,546. அந்த வழக்குகளிலே தண்டனை பெற்றவர்கள் 3,78,846. தண்டனை என்பது தண்டமாக அபராதமாக விதிக்கப்படுவதும் உண்டு. அந்த முறையிலே விதிக்கப்பட்டு தண்டனை பெற்றவர்கள் 2,95,641. சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டவர்கள் 50,073. அந்த 50 ஆயிரம் பேரிலும் குறைந்தபட்சத் தண்டனையைவிடக் குறைவாகப் பெற்றவர்கள் 34,764 பேர்தான். எனவே தண்டிக்கப்பட்டு சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டவர்கள் 13 சதவீதம் தான். இவர்களிலும் குறைந்தபட்ச தண்டனை பெற்றவர்கள் நூற்றுக்கு 4 பேர்தான். அதாவது 'out of which 4% only were awarded the minimum punishment' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நீதிபதிகள் குற்றவாளிகளைத் தண்டித்திருக்கிறார்கள். உண்மையிலேயே கைது செய்யப்பட்டவர்களில் நூற்றுக்கு நான்கு பேர் தான் சட்டத்தின் அளவு தண்டிக்கப்படுகின்ற நிலை இருந்தது